பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 20 | திங்கட்கிழமை | 04.09.2023 | அதிர்வு 34

## யாழ். விபத்தில் இளைஞர் சாவு!

யாழ்ப்பாணம் – மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் பாடசாலைக்கு அருகாமையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 02

# ஆக்கிரமிப்பைத் தடுக்கத் தமிழ்ச் சமூகம் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை

### முன்னணியின் பொதுச்செயலாளர் கஜேந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு



“தமிழர் தாயகத்தை சிங்கள மயமாக்கும் – பௌத்த மயமாக்கும் நோக்குடன் சிங்கள – பௌத்த அடிப்படைவாதிகள் மிகத் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த ஆக்கிரமிப்பைத் தடுக்கத் தமிழ்ச் சமூகம் வீதியில் இறங்கிப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை.”

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை, இலுப்பைக் குளம் பகுதியில் பொரலுகந்த ரஜமகா விகாரை 05

# பிரபாகரனின் பெயரை உச்சரிக்கக் கூட இனவாதிகளுக்கு அருகதை கிடையாது!

## வீரசேகர, வீரவன்ஸ, கம்மன்பில மூவருக்கும் சாட்டையாகப் பதிலடி



திருகோணமலை, செப்.04

“தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் பெயரை உச்சரிப்பதற்குக் கூட சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்ற இனவாதிகளுக்கு எந்த அருகதையும் கிடையாது. 02



# வேகக் கட்டுப்பாட்டை இழந்த வான் 5 வாகனங்களுடன் மோதி விபத்து!

## ஒருவர் மரணம்; நால்வர் படுகாயம்

வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அத்துடன் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் எம்பிலிப்பிட்டிய – கல்வங்குவ பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த வான் ஒன்று, 5 வாகனங்களை மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட வான், மற்றுமொரு வான், மூன்று ஓட்டோக்கள், 02

# தமிழரின் பகுதிகளில் விகாரைகளை புகுத்துவது சட்டவிரோதமான செயல்

### இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் கருத்து



தமிழ் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் விகாரைகளைப் புகுத்துவது சட்டவிரோதமான செயல் என்று இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

தனியார் வானொலியொன்றில் ஒலிபரப்பான நிகழ்ச்சியில் கலந்து 02

## இரகசியம்



கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றியீட்டியவர் என்னவோ கோட்டாபய ராஜபக்ஷதான். ஆனால், வடக்கு – கிழக்கில், தமிழ்ப் பேசும் மக்கள் மத்தியில், அமோக செல்வாக்கு சஜித் பிரேமதாஸாவுக்கே கிட்டியது. அப்படியாயின், 02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

## தமிழரின் பகுதிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

"வடக்கு மாகாணத்தில் தற்போது காணப்படுகின்ற பௌத்த பண்பாட்டுச் சின்னங்கள் தமிழ் மக்களின் உரிமைகளாகும். ஆனால், தற்போது புகுத்தப்படுகின்ற அம்சங்களை ஏற்றுக் கொள்ள முடியாது" – எனவும் இதன் போது அவர் மேலும் கூறினார்.

## வேகக் கட்டுப்பாட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒரு மோட்டார் சைக்கிள் என்பவற்றுடன் மோதியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குக் காரணமான வானில் பயணித்த 73 வயதான வயோதிபரே உயிரிழந்துள்ளார். ஏனைய வாகனங்களில் பயணித்த நால்வர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தநிலையில், விபத்துக்குக் காரணமான வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவத்தின்போது அவர் மது போதையில் இருந்தமை பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## பிபாகரனின் பெயரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எங்களுடைய உரிமைக்காகப் போராடிய எங்களின் தேசியத் தலைவர் பிரபாகரனின் நியாயமான நிலைப்பாடுகளை நாங்கள் சுட்டிக்காட்டுவதற்கு ஒருபோதும் தயங்கப்போவதில்லை."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

"விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைத் துதிபாடுவோரை அரசு உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்" – என்று சிங்களக் கடும்போக்குவாத நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாக வலியுறுத்தியிருந்தனர். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே கஜேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்கள் மிகக் கீழ்த்தனமான சிங்கள – பௌத்த இனவாத நோயால் பாதிக்கப்பட்டிருக்கின்றவர்கள். இங்கு ஏனைய இனத்தவர்கள், மதத்தவர்கள் வாழ்வதற்கு அவர்களுக்கு உடன்பாடில்லை. குறிப்பாகத் தமிழர்களை அழித்தொழிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் குறிக்கோள்.

தங்களைப் போன்ற இனவெறியர்களின் செயற்பாடுகளாலேயே தமிழர்கள் ஆயுதமேந்திப் போராடினார்கள் என்ற உண்மையை இன்று பெரும்பான்மையினத்தவர்களின் தரப்பில் இருந்தே சொல்லப்படுவதை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

தமிழ்த் தரப்பில் இருந்து உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்களைக் கைது செய்து சிறையில் தள்ளி அல்லது கொலை செய்து கதையை முடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அந்த மூன்று இனவாதிகளும் இருக்கின்றார்கள் என்பதை அவர்களின் கருத்து வெளிப்படுத்துகின்றன. இவர்களின் அச்சுறுத்தல்களுக்குத் தமிழ்ச் சமூகம் அடிபணியப்போவதில்லை.

எங்களுடைய உரிமைக்காகப் போராடிய எங்களின் தேசியத் தலைவர் பிரபாகரனின் நியாயமான நிலைப்பாடுகளை நாங்கள் சுட்டிக்காட்டுவதற்கு ஒருபோதும் தயங்கப்போவதில்லை." – என்றார்.

## யாழ்.விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கீரியான் தோட்டம், பண்டத்தரிப்பு, சில்லாலை என்ற முகவரியில் வசிக்கும் பத்மநாதன் வசீகரன் (வயது 20) என்ற இளைஞரே சாவடைந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–

வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று திரும்புவதற்கு சமிக்ஞை காண்பித்தபோது, யாழ்ப்பாணத்தில் இருந்து சில்லாலை நோக்கிப் பயணித்த உயிரிழந்த இளைஞரின் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் இருந்த தொலைபேசி தொடர்பு இணைப்புக் கம்பத்துடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே இளைஞர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம், பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அதே செல்வாக்கு தமிழ்ப் பேசும் மக்களிடமிருந்து சஜித்துக்குக் கிடைக்குமா என்பதுதான் இப்போதைய கேள்வி.

2019 ஜனாதிபதி தேர்தலில் சஜித் சிறுபான்மையினரின் பிரதேசங்களில் அதிக வாக்குகளைப் பெற்றாராயினும், அப்போது அவர் ரணில் விக்கிரமசிங்க தலைவராக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பிலான வேட்பாளர். அத்தோடு, அவருக்காக ரணிலும் நேரடியாக இறங்கிப் பிரசாரம் செய்திருந்தார். அந்தச் சூழலிலேயே – பின்புலத்திலேயே – சஜித்துக்கு சிறுபான்மையினர் மத்தியில் அதிக வரவேற்புக் கிட்டியது.

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தும் ரணிலும் எதிரெதிர்த் தரப்பில் நின்று போட்டியிட்டால் சிறுபான்மை மக்கள் – குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் – யாரை ஆதரிப்பார்கள் என்பதே கேள்வி.

அந்த வாக்குகள் தமக்குக் கிடைப்பதைத் தாமே தம் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கெடுத்து விடுவார் ரணில் விக்கிரமசிங்க என்றே எனக்குத் தோன்றுகின்றது.

ஏற்கனவே பௌத்த – சிங்களப் பேரினவாதத்தில் முகிழ்ந்த மொட்டு கட்சியுடன் சகவாசம் வைத்து, ஜனாதிபதிப் பதவிக்கு – அதிகாரத்துக்கு – வந்த ரணில் விக்கிரமசிங்க, தாமாகவே தமிழர்களை பகைத்துக் கொள்ளும் கைங்கரியங்களை தேடித்தேடி செய்து வருகின்றார்.

தான் செய்யவே முடியாத 13 ஆவது திருத்தத்தின் முழு நடைமுறையாக்கத்தைத் தாம் செய்யப் போகின்றார் என்று கூறி, நிலைமையைக் கெடுத்து, தெற்கில் பேரினவாத வெறிக் கிளர்ச்சியை அதனால் தூண்டிவிட்டிருக்கின்றார் ரணில் என்று தமிழ் மக்கள் கருதும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

போதாக்குறைக்கு, '13 பிளஸ்' என்று மஹிந்தரும் மற்றவர்களும் கூடப் பேசிக் கொண்டிருக்கையில், பொலிஸ் அதிகாரம் தர மாட்டேன் என்று '13 மைனஸ்' பாங்கில் ரணில் பேசியிருக்கின்றமை அவரது உண்மை முகத்தை காட்டியிருப்பதாகத் தமிழர்கள் கருதும் நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதுதான் சமயம் என்று தன் நிலைப்பாடு '13' தான் என்று கூறியமை மூலம் எந்த குறைபாடுமின்றி அப்படியே 13 இன் முழு நடைமுறையாக்கத்திற்குத் தாம் ஆதரவு என்ற தோற்றப்பாட்டை வெளிப்படுத்தி இருக்கும் சஜித்தின் நிலைப்பாடு, ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் சமயத்தில் தமிழர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெறும் சாத்தியத்தைத் தந்து நிற்கின்றது.

அது மட்டுமல்லாமல், தமிழர் தரப்பில் அதிக ஆதரவு பெற்ற கட்சிகளைப் பகைத்துக் கொண்டு, விக்னேஸ்வரன், பிள்ளையான் போன்ற ஆனைமுக நாமம் கொண்ட தரப்புகளுடன் யானைக் கட்சித் தலைவர் கைகோர்த்து செயற்படுகின்றார்.

மாகாண சபைகளை ஆலோசனைச் சபை ஒன்றின் மூலம் கையாளுதல் என்ற கதையை சர்வ கட்சிக் கூட்டத்தில் ரணில் எடுத்த போதே, பக்கத்தில் சித்தார்த்தன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரை வைத்துக்கொண்டு, அவர்களின் இணக்கத்தோடு, அந்தத் திட்டத்தைத் தாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அடியோடு நிராகரிக்கிறோம் என்று நெற்றிப்பொட்டில் அடித்தாற் போல கூறினார் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன்.

அவர்களை எல்லாம் பகைத்துக் கொண்டு, வடக்கில் விக்னேஸ்வரனின் கயிற்றில் அத்திட்டத்தில் முன்நகர்கின்றார் ரணில் என்று தகவல்.

இப்போது அவரிடம்தான் அதிகாரம். அதனால் அதை அவர் செய்யலாம். ஆனால் அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் வரும் போது, ரணிலா சஜித்தா என்ற கேள்வி எழுகையில், இந்த விடயங்கள் எல்லாம் சஜித் பக்கம் பலமான காரணிகளாகச் சேர்ந்து விடும். ரணிலுக்கு எதிரான நிலைப்பாட்டைத் தமிழ்க் கட்சிகள் பலவும் எடுக்கும் கட்டாயத்தை – சஜித் பக்கம் அவர்கள் பாயும் இக்கட்டை – ரணிலே ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார் என்பது என் கணக்கீடு.

'கெடுகுடி சொற்கேளாது' என்பர். ரணில் விக்கிரமசிங்கவும் யாரின் கதையையும் கேட்கார். தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற மிதப்புடன் நடப்பவர். அந்தப் பண்பியல்பால்தான் – போக்கால்தான் – 2005 இல் பெருவெற்றியுடன் வரவேண்டிய ஜனாதிபதிப் பதவியைக் கோட்டை விட்டார் அவர். அப்போது தமிழர் தரப்பிடம் படித்த அதே பாடத்தையே, 19 ஆண்டுகள் கழித்து 2024 இலும் அவர் மீளவும் படிக்கப் போகின்றார் என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது.







# சுதந்திரக் கட்சியின் 72ஆவது தேசிய மாநாடு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 72 ஆவது தேசிய மாநாடு கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பில் நேற்று நடைபெற்றது.

இதில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் சு.கவின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.















# நல்லூரான் 14 ஆம் நாள் உற்சவ வீதியுலா

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவில் 14ஆம் நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி,தெய்வானை சமேத ராக முருகப்பெருமான் பாம்பு வாகனத்தில் வீதியுலாவந்தார்.

படங்கள் :- பிரபாகரன் டிலக்சன்


















# யாழில் ஆள்கடத்தலில் ஈடுபட்ட 5 பேர் கிளிநொச்சியில் வைத்து நேற்று கைது

## பழ வியாபாரியும் பத்திரமாக மீட்பு

**யாழ்ப்பாணம், கல்வியங்காடு பகுதியில் ஆள்கடத்தலில் ஈடுப்பட்ட குற்றச்சாட்டில் கிளிநொச்சி, கனகாம்பிகைக் குளம், கரடிப்போக்குச் சந்தி, பரந்தன் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய ஐந்து இளைஞர்கள் கோப்பாய் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

கல்வியங்காடு பகுதியில் பழ வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர், வான் ஒன்றில் வந்த கும்பலால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என்று நேற்றுமுன்தினம் உறவினர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

கிளிநொச்சியில் இருந்து வான் ஒன்றில் யாழ்ப்பாணம் வந்த 12 பேர் அடங்கிய கும்பலே வியாபாரியைக் கடத்திச் சென்றிருந்தனர் என்று உறவினர்கள் முறையிட்டிருந்தனர்.

கடத்தப்பட்ட நபர், நபர் ஒருவரிடம் 3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பணம் வாங்கியிருந்தார் எனவும், அதனை மீளச் செலுத்தாத நிலையில் இரு தரப்புக்கும் இடையில் பிரச்சினை நிலவி வந்தது. இந்தப் பின்புலத்திலேயே இந்நபர் கடத்தப்பட்டிருந்தார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடத்தல் கும்பல் கிளிநொச்சியில் மறைந்திருக்கின்றது எனக் கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் கிளிநொச்சிக்கு விரைந்த பொலிஸார் கடத்தல் கும்பலைக் கைது செய்தமையுடன், கடத்தப்பட்டவரையும் பத்திரமாக மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# யாழில் ‘குரியர்’ பணத்தை வழங்காது ஊழியரைத் தாக்கிய நபருக்கு மறியல்

“குரியர்“ பொருளை வாங்கி விட்டு, அதற்குப் பணம் கொடுக்காது, குரியர் வழங்கச் சென்ற ஊழியரை வீட்டுக்குள் அழைத்துச் சென்று தாக்கிய நபரை இளவாலைப் பொலிஸார் கைது செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில், மன்று அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வீடொன்றின் விலாசத்துக்கு வந்த குரியரை, குரியர் நிறுவன ஊழியர் வழங்கச் சென்றிருந்தார். அவரிடம் கொரியரைப் பெற்றுக்கொண்ட நபர் அதற்கு உரிய பணத்தை வழங்கவில்லை. அதனைக் கேட்ட ஊழியரைத் தனது வீட்டுக்குள் அழைத்துச் சென்று ஊழியரைச் சரமாரியாகத் தாக்கி விட்டு, ஊழியரைத் துரத்தியுள்ளார்.

அதையடுத்து தாக்குதலுக்கு இலக்கான ஊழியர் அது தொடர்பில் இளவாலைப் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து, தாக்குதலாளியைக் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

மன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணைகளைத் தொடர்ந்து சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது.

# மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் ஜா-எலவில் கார்களுக்கு சேதம்

காற்றுடன் கூடிய மழை காரணமாக நேற்று ஜா-எல பகுதியில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் 3 கார்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் தேவாலயமொன்றின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள் மீதே மரம் முறிந்து வீழ்ந்துள்ளது.

மரம் முறிந்து விழுந்ததில் யாருக்கும் காயமோ, உயிரிழப்போ ஏற்படவில்லை என ஜா-எல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## ஆக்கிரமிப்பைத் தடுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைக்கப்படவுள்ளதை எதிர்த்து நேற்று மனித சங்கிலிப் போராட்டம் திருகோணமலை, சாம்பல் தீவு பாலத்துக்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே கஜேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"திருகோணமலை மாவட்டத்தில் இனங்களுக்கிடையில் மோதலை ஏற்படுத்தும் வகையில் சிங்கள – பௌத்த இனவாதிகள் செயற்பட்டுக் கொண்டிருக்கையில் அவர்களுக்குப் பொலிஸாரும் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்கி நீதிமன்றத்தை அவர்கள் தவறாக வழிநடத்த முற்படுகின்றனர். இதனூடாக எமது உரிமைப் போராட்டத்துக்கு எதிராகத் தடை உத்தரவுகளையும் பொலிஸார் பெறுகின்றனர்.

வடக்கு – கிழக்கு தமிழர் தாயகத்தின் தலைநகராகத் திருகோணமலை விளங்குகின்றது. இலங்கைக்கு 1948ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைக்கின்றபோது திருகோணமலை மாவட்டத்தில் 4 வீதமான சிங்களவர்கள் மாத்திரமே வாழ்ந்தார்கள். ஆனால், இன்று இம்மாவட்டத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கை 30 வீதமாக அதிகரித்துள்ளது. கிட்டத்தட்ட 800 வீதமாக சிங்களவர்களின் வளர்ச்சி திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுகின்றது. சட்டவிரோத திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் தொடர்ந்தும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி – பௌத்த விகாரைகளை அமைத்து தமிழர்களின் இருப்பை அழிக்கின்ற செயற்பாடுகளை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். எங்கள் உரிமைக்காக நாங்கள் தொடர்ந்தும் போராடிக்கொண்டே இருப்போம்." – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஜெனிவாத் திருவிழா

வருடா வருடமும், பருவ நிலைக்கு ஏற்பவும் வந்து போகும் திருவிழாக்கள், உற்சவங்கள், கொண்டாட்டங்கள் நம் மத்தியில் உள்ளன.

நல்லூர் திருவிழாவும் அப்படி ஒன்றுதான். ஆனால் ஒவ்வொரு வருடமும் அத்திருவிழா மெருகு கூடிச் செல்கின்றது. பக்தர்கள் கூட்டத்திலிருந்து திருவிழாவை ஒட்டிய நிகழ்வுகள் வரை அனைத்தும் மேம்படுவதை - அதிகரிப்பதை - காண முடிகிறது.

நமக்கு இன்னொரு திருவிழாவும் உண்டு. அது கடந்த 14 அல்லது 15 வருடங்களாகத்தான் நமக்கு முக்கியத்துவமானதாகத் தெரிந்தது. வருடத்திற்கு மூன்று தடவைகள் நடக்கும் திருவிழா அது. இப்போது அது சுரத்துக் குன்றி வருவது கவனிக்கத்தக்கது.

அதுதான் - ஜெனிவாத் திருவிழா. ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடர் எனும் திருவிழா.

மீண்டும் செப்டம்பர் மாதத் திருவிழா இன்னும் ஒரு வாரத்தில் - வரும் 11 ஆம் திகதி - ஆரம்பமாகின்றது. ஆனால், அதன் மீதான மக்களின் - குறிப்பாக இலங்கையில் பாதிக்கப்பட்டு, ஜெனிவா அமர்வு மூலம் நீதி கிடைக்கும் என எதிர்பார்த்த தமிழர்களின் - நம்பிக்கையும் ஈடுபாடும் எல்லாம் குன்றிக் கரைந்து விட்டன என்பதுதான் நிலைமை.

இம்முறை கவுன்ஸிலின் 54ஆவது அமர்வில் இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அவதானிப்பு அறிக்கை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. அந்த அறிக்கையின் உத்தியோகப் பற்றற்ற பிரதி ஏற்கனவே இலங்கையின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டு இருப்பதாகவும், இலங்கையின் பிரதிபலிப்புகள் இரண்டொரு நாள்களில் எழுத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஜெனிவா அலுவலகத்துக்குக் கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இன நல்லிணக்கத்திற்கான நடவடிக்கைகள், 13ஆம் திருத்தத்தின் நடைமுறையாக்கம் மூலம் அதிகார பகிர்வுக்கான எத்தனங்கள், மாகாண சபைகளை வலிமைப்படுத்தல், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபித்தமை, காணிச் சீர்திருத்தம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுசீரமைக்கும் முயற்சி, கைதிகள் விடுவிப்பு, ஊழல் தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டமை என்று பல ஆலாபரணங்களை வழமைபோல இலங்கை இம்முறையும் தனது சமாளிப்புப் பதிலில் தரும் என்று எதிர்பார்க்கலாம்.

அதேபோல, வழமை போன்று, காணாமல் போனோரைக் கண்டறிதல் மற்றும் அது தொடர்பிலும் யுத்தத்தின் போதும் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பிலும் சர்வதேச நியமங்களுக்கு அமைவான நீதி விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறல் கடப்பாட்டை நிலைநாட்டி, பாதிப்புற்றோருக்கு நீதி செய்து, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமலையை உறுதி செய்யும் விடயங்களில் இலங்கையின் செயலின்மையை வேறு சொற்பிரயோகங்களில் ஆணையாளரின் அலுவலக அறிக்கை வெறுமனே கோடி காட்டும். மேலதிகமாக, நாட்டில் ஜனநாயகச் செயற்பாடுகளுக்கு அதற்கான இடைவெளி இல்லாமலாக்கப்பட்டமை, மக்களின் ஒன்று கூடும் மற்றும் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் மறுக்கப்படல் போன்ற விடயங்கள் தொடர்பில் தனது கவலையை அல்லது குறை கூறலை அது வெளிப்படுத்தும்.

அவ்வளவுதான். அதற்கு மேல் புதிதாக இந்த அமர்வினால் எதுவும் வந்து விடாது, நடந்து விடாது என்பது திண்ணம். அதுதான் நமது கடந்த கால அனுபவம்.

கடந்த ஆண்டு 51 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மறு ஆய்வு என்ற கணக்கோடு இம்முறை திருவிழா நடந்தேறும். அடுத்த செப்ரெம்பரில் மீள இலங்கை விடயம் புதிய பிரேரணைக்கு வரும்போது சற்று ஆரவாரம் இருக்கும். பின்னர், அதுவும் வழமை போல வரும் தீர்மானம், அறிக்கையோடு முற்றுப்பெற ஜெனிவா விவகாரம் - திருவிழா - இழுபடும். அவ்வளவுதான்.

# 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையில் நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் சில பிரதேச செயலகப் பிரிவுகளுக்கே இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு, நுவரெலியா, கண்டி உட்பட சில மாவட்டங்களில் நேற்றுக் காலை முதல் மழை பெய்து வருகின்றது.

# பொதுவேட்பாளராக களமிறங்கத் தயார்!



மைத்திரிக்கு மீண்டும் வந்த ஜனாதிபதிப் பதவி ஆசை

“அரசியலில் நான் எதற்கும் தயாராகவே இருக்கின்றேன். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகவும் நான் தயார்.”

– ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் நாம் அனைவரும் சகோதரர்கள்போல் செயற்பட்டு வருகின்றோம்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் பொது வேட்பாளராகக் களமிறங்குவதற்கான சாத்தியம் உள்ளது. அதற்கான அழைப்பு விடுக்கப்பட்டால் நிச்சயம் ஏற்பேன்.

நான் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவன். சொல்லில் அல்ல செயலில் காட்டியவன். கடந்த காலத் தவறுகளையும் சரி செய்து கொண்டு முன்னோக்கிச் செல்ல முடியும். நான் எதற்கும் தயார்.” – என்றார்.

# கூட்டணி அமைத்தாலும் சஜித்தான் வேட்பாளர்!

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்



“ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸதான். புதிய கூட்டணி அமைத்தால்கூட இந்நிலைப்பாடு மாறாது.”

– இவ்வாறு திட்டவட்டமாக அறிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேசிறி.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கவே ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது. இந்த நிலைப்பாட்டிலேயே நாமும் உள்ளோம். கூட்டணி அமைப்பதில் நிதானம் தேவை. அரசமைப்பு ரீதியில் உள்ள சூழ்ச்சிகள் பற்றியும் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

மொட்டுக் கட்சியினரைத் தாக்கியே ரணில் விக்கிர மசிங்க ஜனாதிபதியானார். இது மொட்டுக் கட்சிகாரர்களுக்குப் புரியவில்லை. ஒரு கட்சியாலேயே மக்கள் போராட்டம் சீரழிக்கப்பட்டது. அந்தக் கட்சிக்கும் கடந்த காலத்தில் கறைபடிந்த வரலோறே உள்ளது. அந்தக் கட்சியின் செயலால்தான் ரணில்விக்கிரமசிங்க ஜனாதிபதியானார்.

அதேபோல் பதவிகளை இலக்காகக்கொண்டு புதிய கூட்டணி அமைப்பதற்கு நாம் எதிர்ப்பு.” – என்றார்.

# இலங்கையில் 55 வீதமானோர் ஆபத்தில்!

## - கணக்கெடுப்பில் அதிர்ச்சித் தகவல்

இலங்கையின் மக்கள் தொகையில் 55 சதவீதமானோர் கல்வி, சுகாதாரம், பேரிடர் மற்றும் வாழ்க்கை நிலைமைகள் போன்றவற்றில் ஆபத்தில் இருக்கின்றனர் என்று சமீபத்திய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டமும், ஒக்ஸ்போர்ட் வறுமை மற்றும் மனித அபிவிருத்திப் பிரிவும் இணைந்து நடத்திய ஆய்வில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்பாக கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் இந்த வருடம் மார்ச் மாதம் வரை பல்வேறு அம்சங்களில் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

இதன்படி, கல்வி, சுகாதாரம், அனர்த்தங்கள் மற்றும் வாழ்க்கைத் தரம் போன்றவற்றில் இலங்கையில் 10 பேரில் 6 பேர் ஆபத்தில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடுதி உரிமையாளரைத் தாக்கி விட்டு அறைக்குத் தீ வைத்த சுற்றுலாப் பயணி

சுற்றுலாப் பயணி ஒருவர் விடுதி உரிமையாளரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கி அறைக்குத் தீ வைத்துள்ளார்.

வெலிகம, கும்பல்கம குருந்துவத்த பிரதேசத்தில் சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்தவரே இந்த அடாவடியில் ஈடுபட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இரு தரப்பினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது எனவும், ஆத்திரமடைந்த சுற்றுலாப் பயணி விடுதி உரிமையாளரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

33 வயதான இந்த எகிப்திய சுற்றுலாப் பயணி சுமார் மூன்று வருடங்களாக இந்தச் சுற்றுலா விடுதியில் தங்கியிருந்துள்ளார் எனவும், ஒரு மாத காலத்துக்கான சுற்றுலா விடுதிக்குச் செலுத்த வேண்டிய பணத்தை அவர் செலுத்தத் தவறியுள்ளார் எனவும் அறியவந்துள்ளது.

இந்நிலையில் விடுதி உரிமையாளர் அதனை வாங்குவதற்கு முற்பட்டபோது அவர் மீது சுற்றுலாப் பயணி தாக்குதல் நடத்தியுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

அதேவேளை, அந்தச் சுற்றுலாப் பயணி தாம் தங்கியிருந்த அறையில் இருந்த படுக்கைக்குத் தீ வைத்துவிட்டு, எரிவாயு சிலிண்டரை அந்த இடத்தில் வீசிவிட்டு பொலிஸாரைக் கண்டதும் அவரும் தீயில் குதிக்க முற்பட்டுள்ளார் எனவும் அறியவந்துள்ளது.

வெலிகம தலைமையகப் பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று வந்து சுற்றுலாப் பயணியை தீயில் இருந்து மீட்டு உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 62 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் இவ்வருடம் இதுவரை அடையாளம்

## 38 பேர் தொற்றினால் உயிரிழப்பு

2023 ஆம் ஆண்டில் இதுவரை நாட்டில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 62 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

2023 ஆம் ஆண்டில் இதுவரை நாட்டில் 62 ஆயிரத்து 29 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இவ்வருடம் இதுவரை டெங்கு நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 38 ஆக உயர்ந்துள்ளது.

# போதைப்பொருள் வியாபாரி காத்தான்குடியில் சிக்கினார்

பிரபல போதைப்பொருள் வியாபாரி ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, காத்தான்குடியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 15 கிராம் 750 மில்லி கிராம் அளவிலான ஐஸ் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆணின் சடலம் மீட்பு!

மஹாஓயா – தம்பதெனிய பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

மஹாஓயா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது அந்தப் பகுதியிலுள்ள காணியொன்றில் சடலம் கண்டெடுக்கப்பட்டது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் தேக்கவத்தை பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவராவார்.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹாஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### வடக்குக் கிழக்கில் புத்த விகாரைகளை அமைத்தால் என்ன? - என்று

# அறிவை அடகு வைத்து விட்டு வந்து விதுர விக்கிரமநாயக்கர் வினாவாம்

### சீறுகின்றார் சிவசேனையின் மறவன்புலவு க. சச்சிதானந்தன்



தெற்கிலங்கையில் சைவக் கோயில்கள் இருக்கின்றன. எனவே வடக்குக் கிழக்கு இலங்கையில் புத்த விகாரைகளை அமைத்தால் என்ன? அறிவை அடகு வைத்த பின்பு வினவுகிறார் மாண்புமிகு அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கர்.

– என்று தெரிவித்திருக்கின்றார் இலங்கை சிவசேனையைச் சேர்ந்த மறவன்புலவு க.சச்சிதானந்தன்.

தாம் நேற்று ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையிலேயே அவர் இப்படித் தெரிவித்திருக்கின்றார். இயன்றவரை தூய தமிழ்ச் சொற் பிரயோகங்களைக் கொண்ட அவரது அறிக்கை அப்படியே அதே சொல்லாடலில் இங்கு தரப்படுகின்றது. அதன் விவரம் வருமாறு:–

புத்தர் இலங்கைக்கு வந்த நாளில் முருகனுக்குத் தைப்பூச விழா. இலங்கை மக்கள் அனைவரும் கூடி எடுத்த விழா. மாணிக்கக் கங்கையில் விழா. இலங்கையின் ஆதிகுடிகள் சைவர்களே புத்தரை வரவேற்றார்கள். தைப்பூச நாளில் வரவேற்றார்கள்.

கதிர்காமத்தில் இருந்து காங்கேயன்துறை வரை நீண்ட, சிலாவத்தில் இருந்து மட்டக்களப்பு வரை அகன்ற, 66,000 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள இலங்கைத் தீவு முழுவதிலும் பல்லாயிரம் சைவக் கோயில்களே இருந்தன. இலங்கை சிவபூமி.

புத்தர் வரும் பொழுது இருந்தன சைவக் கோயில்கள்.

படிப்படியாக புத்தர்கள் விகாரர்களைக் கட்டத் தொடங்கினீர்கள்.

அப்பொழுது இருந்த கோயில்களே இன்று வரை தொடர்கின்றன. புதிதாக யாரும் தென்னிலங்கையில் சைவக் கோயில்களைக் கட்டவில்லை. பழைய சைவக் கோயில்களையே திருப்பணி செய்து புதுப்பிக்கின்றார்கள்.

மதவாச்சிக்கு வடக்கே ஈரற்பெரிய குளத்தில் பிள்ளையாருக்கு அருமையான கருங்கல் கோயிலை இக்காலத்தில் எழுப்பியவர் சைவத்தமிழர் அல்ல. புத்தராகிய சிங்களவர். நீங்கள் போய்ப் பாருங்கள். "மூஷிக வாகன…" எனத் தொடங்கும் கணபதித் தெய்யோ மந்திரத்தைத் தன் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்காத புத்த சிங்களத் தாய் ஒருவர் இருந்தால் எனக்குச் சொல்லுங்கள்.

புத்தர் வரும் முன்பும் வந்த பின்பும் பல நூற்றாண்டுகளுக்கு இலங்கையில் விகாரைகள் இல்லவே இல்லை.

ஏதோ போகட்டும் என்று சைவர் ஆகிய நாங்கள் விகாரைகளைக் கட்ட உரிமம் தந்தோம்.

விசயன் வந்த பின்பும் அநுராதபுரம் சைவ சமயப் பிரதேசம். ஆண்ட அரசர்களின் பெயர்கள்: சிவன், மூத்த சிவன், மகாநாகன். முற்று முழுதாகச் சைவத் தமிழ்ப் பெயர்கள்.

சைவர்களின் தயவில் கட்டியவையே இப்பொழுது தென்னிலங்கையின் புத்த விகாரைகள்.

புத்த விகாரைகளைக் கட்டினாலும் அங்கே சிவலிங்கம் வேண்டும். திருமால் வேண்டும், இலட்சுமி, சரசுவதி, துர்க்கை, காளி வழிபட வேண்டும் வைரவர் வழிபட வேண்டும். தமிழ்ப் பெண்ணாகிய பத்தினியை வழிபட வேண்டும்.

எனவே நீங்கள் விகாரைக்குள்ளே சைவக் கோயில்களைக் கட்டி வைத்திருக்கிறீர்கள்.

ஏனென்றால் உங்களுக்குத் தெரியும் இலங்கை சிவ பூமி. இச் சிவ பூமியில் சைவக் கோயில் இல்லாத இடம் இருக்க விடக்கூடாது எனப் புத்தராகிய நீங்களே நினைக்கிறீர்கள்

சைவத்தமிழ் பெண்ணான பத்தினியைப் புத்த விகாரைகளுள் அமைத்தவன் முதலாம் கயவாகு.

இலங்கையில் நீங்கள் கணபதி தெய்யோ என்று நாளும் மனதாலும் உடலாலும் நெக்குருகி வழிபடுகின்ற போற்றுகின்ற பிள்ளையார் வழிபாட்டைப் புத்தரிடையே பரவலாக்கியவன் நரசிம்ம பல்லவனின் யானைப்படைத் தளபதி மாறவர்மன். வாதாபி சென்று வெற்றியோடும் பிள்ளையார் சிலைகளோடும் இலங்கை வந்தவன்.

அதே நரசிம்மம் பல்லவன் தெற்கே தேவேந்திர முனையில் தென்னாவரம் சிவன் கோயிலைப் பல்லவ பாணியில் கட்டு வித்தான் என்பதை நான் சொல்லவில்லை. மேலைநாட்டு வணிகப் பயணி ஊழுளஅயள ஐனைஉழிடநரளவரயள சொல்கிறார். அறிவை அடகு வைத்து விளாசுகின்ற உங்களுக்கு இந்தச் செய்தி தெரிய வாய்ப்பில்லை.

முதலாம் பராக்கிரமபாகு, மகன் விக்கிரமபாகு, மகன் இரண்டாம் கயவாகு யாவரும் சைவத்தைப் பேணிய அரசர். சைவத்தமிழ்ப் பாண்டிய சந்திரகுல வம்சத்தினர் எனக் குல வமிசமே பூசா வழியே கூறுவதைப் படித்தது உங்களுக்கு நினைவில்லையா?

கந்தளாயில் சதுர் வேதி மங்கலத்தில் அடைக்கலமாகிய இரண்டாம் கயவாகுவை நீங்கள் மறந்துவிட முடியுமா?

அதற்குப் பின், இரண்டாம் நான்காம் ஆறாம் பராக்கிரமபாகு காலங்களில் இலங்கையின் தென்முனையில் தென்னாவர நாயனார் கோயிலையும் அங்கு சதுர்வேதி மங்கலங்களையும் அம்மன்னர்கள் ஆதரித்ததைச் செப்பேடுகளாகக் கல்வெட்டுகளாகக் காணலாமே. நீங்கள் படிக்கவில்லையா?

வழிபாட்டிடங்களைப் பாதுகாக்கும் மூச்சிங்கள தம்பதெனியா, கம்பளை, கோட்டை மன்னர்களின் கல்வெட்டுகளில் முதலில் புத்த விகாரை, பின் சதுர் வேதி மங்கலம், பின் சைவத் தேவாலயம் யாவையும் முறையாகப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என எழுதியதை நீங்கள் படிக்கவில்லையா?

சீனப் பயணி செங்கோ வழிபட்டுத் தமிழில் போற்றிக் கல்வெட்டு எழுதிய கோயிலே தென்னவரம். அந்தக் கல்வெட்டு இன்றும் கொழும்பு அருங்காட்சியகத்தில் இருக்கிறதே நீங்கள் பார்க்கவில்லையா?

மொரொக்கோ நாட்டுப் பயணி முகமதியரான இபன் பட்டுட்டா கண்டு ஆரவாரித்த கோயிலன்றோ தென்னவரம். பயணக் குறிப்புகளைப் படிக்கவில்லையா?



இலங்கையில் தமிழ்ச் சைவர்கள் எவராவது புத்த விகாரையை இடித்த வரலாறை நீங்கள் சொல்ல முடியுமா?

ஆனால் கோட்டை அரசன் மாயாதுன்னையின் மகன் முதலாம் இராசசிம்மன் எத்தனை புத்த விகாரைகளை இடித்தான்? தலதா மாளிகையை இடிக்க முயன்றான் – என அங்கே இன்றும் ஓவியம் இருக்கின்றமை உங்களுக்குத் தெரியாதா?

தென்னிலங்கையில் உள்ள சைவக் கோயில்கள் ஆதியான கோயில்கள். அவற்றை இப்பொழுது யாரும் கட்டவில்லை.

அங்கு சைவர்கள் இருப்பதால் அக் கோயில்கள் தொடர்கின்றன.

வடக்கு கிழக்கில் புத்தர்கள் 1948 வரை 4 வீதம். அவர்களுக்கான புத்த விகாரைகள் இருந்தன.


சைவத்தமிழ்த் தாயகத்தில் அத்துமீறிய அரச குடியேற்றங்களின் பின்பு அங்கும் விகாரைகளைப் புதிதாக அமைத்தீர்களே!

புத்தர்கள் இல்லாத இடத்தில் புத்த விகாரைகளைக் கட்ட வேண்டாம். சைவத் தமிழர்களின் மனத்தை நோகடிக்க வேண்டாம். இவ்வாறு வட மாகாணப் புத்த பீடத் தலைவரும் நாக விகாரைப் புத்த பிக்குவும் உங்களுக்கு எடுத்துக் கூறிய

(9ஆம் பக்கம் பார்க்க...)

# இலங்கையில் நாளாந்தம் 9 பேர் தற்கொலையாம்!

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்



நாட்டில் தற்கொலை செய்து கொள்வோரில் -
- 83 வீதமானவர்கள் ஆண்கள்
- 35 வீதமானவர்கள் வேலையில்லாதவர்கள்
- கடந்த வருடத்தில் மாத்திரம் 3,406 பேர் தற்கொலை
- நாளொன்றுக்கு 9 பேர் தற்கொலை!

இலங்கையில் 4 மணித்தியாலத்துக்கு ஒருவர் என்ற அடிப்படையில் நாளொன்றுக்கு 9 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர் எனப் பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு தற்கொலை செய்து கொள்பவர்களில் 40 வீதமானோர் கல்வி கற்றவர்கள் எனவும், அவர்களுள் 22 வீதமானோர் பட்டப்படிப்பை முடித்தவர்கள் எனவும் அந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. நாட்டில் பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொள்வோர் தொடர்பான செய்திகள் அண்மை நாள்களில் அதிகளவில் பதிவாகியுள்ளது.

தனிநபர்கள் தற்கொலை செய்து கொள்வதுடன் சில சந்தர்ப்பங்களில் குடும்பமாகவும் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் இது தொடர்பில் பேராதனை பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வுகளின் போது தற்கொலை செய்துக்கொள்வோரின் எண்ணிக்கை தற்போது சடுதியாக அதிகரித்து வருகின்றமை வெளிக்கொணரப்பட்டுள்ளது.

நாட்டில் தற்கொலை செய்துக்கொள்ளும் தரப்பினரின் எண்ணிக்கை வருடமொன்றுக்கு 10 வீதத்தால் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதாகவும் வருடமொன்றுக்கு 3000 இற்கும் அதிகமானோர் தற்கொலை செய்து கொள்கின்றனர் எனவும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

கடந்த 3 வருடங்களில் மாத்திரம் 9,700 தற்கொலை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கடந்த வருடத்தில் மாத்திரம் 3406 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளமையுடன் அந்த எண்ணிக்கை அதற்கு முன்னைய வருத்துடன் ஒப்பிடும் போது 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

மேலும் தற்கொலை செய்து கொண்டவர்களில் நூற்றுக்கு 83 வீதமான ஆண்களும், 17 வீதமான பெண்களும் உள்ளடங்குகின்றனர். தற்கொலை செய்து கொண்டவர்கள் கல்வி கற்ற தரப்பினர் என்பதுடன் உயிரிழந்தவர்களில் 40 வீதமானவர்கள் சாதாரண தரத்தில் சித்தி அடைந்து உயர்தரத்தில் கல்வி கற்றவர்களாவர்.

இதேவேளை தற்கொலை செய்து கொண்டவர்களில் 22 வீதம் பேர் பட்டப்படிப்பை முடித்துள்ளனர். தற்கொலை செய்துகொண்டவர்களில் 35 வீதமானவர்கள் வேலையில்லாதவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொழில் செய்வோர்களில் விவசாயத்தில் ஈடுபடும் தரப்பினர் இந்தத் தற்கொலை முயற்சிகளில் அதிகம் ஈடுபட்டுள்ளனர். மேலும் இலங்கையை பொறுத்தமட்டில் 4 மணித்தியாலங்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் நாளொன்றுக்கு 9 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாக கொண்டு தற்கொலை எண்ணிக்கை அதிகரிக்கலாம். – என்றார்.

இதேவேளை இது தொடர்பில் மனநல விசேட வைத்திய நிபுணர் ரூமி ரூபன் கருத்து தெரிவிக்கையில் –

பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவே அதிகளவிலான தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. இவ்வாறு செய்வது சட்டப்படி குற்றம் என்றாலும் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை விடுத்து, தற்கொலை முயற்சியில் ஈடுபடும் தரப்பினரை அடையாளம் கண்டு அவர்கள் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும். இதன் மூலமாகவே இந்த மரணங்களைத் தடுக்க முடியும்.

ஒருவர் மன ரீதியாகப் பாதிக்கப்பட்ட நிலையில் அவர் மனநோயாளர் என அடையாளம் காணப்படாமையே இந்த நிலைக்கு மற்றுமொரு காரணமாகும். பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு முறையாக சிகிச்சை வழங்கப்படாமையும் இதற்குக் காரணமாக அமைய முடியும்.

ஒருவர் பொருளாதார ரீதியாக அல்லது மன ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தான் தற்கொலை செய்து கொள்ள போவதாகக் கூறும் போது பலர் இதனை கருத்திக்கொள்வதில்லை. அவர்கள் கூறும் விடயங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

தற்கொலை செய்ய போவதாக கூறும் ஒருவருக்கும் நாம் உதவிகளை செய்வதில்லை. பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது, மன அழுத்தத்தை எவ்வாறு இல்லாமல் செய்வது போன்று நாம் கவனம் செலுத்தும் போது தற்கொலைகள் இடம்பெறுவதை குறைக்க முடியும் . – எனக் குறிப்பிட்டார்.

## அறிவை அடகு வைத்து...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி..)

செய்தி வந்த அச்சு மை காயவில்லையே. அதற்குள் அவசரப்பட்டு உங்கள் அறியாமையை விளாசுகிறீர்களே.

தென்னிலங்கையில் சைவக் கோயில்கள் இருப்பதால் தமிழர் பகுதிகளில் புத்த விகாரைகளைக் கட்ட வேண்டும் என்று சொல்லுகின்ற உங்களுக்கும் அறிவை அடகு வைத்த புத்தர்களுக்கும் சொல்கிறேன் –– தென் இலங்கையில் சைவக் கோயில்கள் அநாதியானவை. அவற்றை இன்றைய தமிழர் தாயகச் சைவர்கள் அமைக்கவில்லை.

தவறான வரலாற்றைத் திணிக்காதீர்கள். போரில் வென்ற வீறாப்பில் புத்த மேலாதிக்கத்தைத் திணிக்காதீர்கள்.

கத்தோலிக்கரும் கிறித்தவரும் கடந்த சில நூற்றாண்டுகளில் போரில் வென்ற பின்பு சைவக் கோயில்களை உடைத்தார்கள். கிறித்தவத் தேவாலயங்களைக் கட்டி எழுப்பினார்கள்.

கத்தோலிக்கரும் கிறித்தவரும் சைவத் தமிழ்த் தாயகத்தில் சைவர்களை அழிக்க முயன்றது போல், இப்பொழுது போரில் வென்ற புத்தர்களாகிய நீங்களும் சைவத் தமிழ் தாயகத்தில் சைவர்களை அழிக்க முயல்கிறீர்கள்.

சைவர்களை அடக்க ஒடுக்க அழிக்க நினைக்காதீர்கள். வெற்றி பெற மாட்டீர்கள். – என்று உள்ளது.

# ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ நடைமுறையில் சதித்திட்டம் உள்ளது என்கிறார் ஸ்டாலின்



‘ஒரே நாடு – ஒரே தேர்தல்’ சட்டம் நிறைவேறினால், திமுக மட்டுமல்ல, எந்த அரசியல் கட்சியும் நாட்டில் செயல்பட முடியாது என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ந.மனோகரன் இல்லத் திருமண விழா தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய முதல்வர் ஸ்டாலின், பா.ஜ.கவினர் திடீரென்று நாடாளுமன்றத்தைக் கூட்டப் போகிறோம் என்று அறிவித் திருக்கிறார்கள்.

ஆனால் நாடாளு மன்றத்தைக் கூட்ட வேண்டிய அவசியம் இன்றைக்கு எதற்காக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், ‘ஒரே நாடு – ஒரே தேர்தல்‘ என்ற ஒரு நிலையை ஏற்படுத்துவதற்காக சில முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அந்த ஒரே நாடு – ஒரே தேர்தலை எப்படி செயல்படுத்த வேண்டும் என்பதற்காக ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவுக்கு யார் தலைவர் என்றால், இந்திய நாட்டின் முன்னாள் ஜனாதிபதி. இந்திய நாட்டின் முதல் குடிமகன் என்று சொல்கிறோம் அல்லவா, அந்த ஜனாதிபதி பொறுப்பில் இருந்தவரைத் தலைவராக போட்டிருக்கிறார்கள்.

இந்திய நாட்டின் ஜனாதிபதி என்பவர் ஒரு பொதுவானவர். அவர் பதவியில் இருந்து விலகினாலும், அவர் அரசியலுக்கு வரக்கூடாது அல்லது அரசியல் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினையிலும் தலையிடுவது அவருக்கு நியாயம் கிடையாது. அதுதான் மரபு. அவர் ஒரு பொதுவானவராக மாறி விடுகிறார்.

ஆனால் அதை எல்லாம் இன்றைக்குக் கொச்சைப்படுத்தி, கேவலப்படுத்தி அதையெல்லாம் பற்றிக் கவலைப்படாமல், இவர்கள் சொல்வதை அவர் கேட்பார் என்பதற்காக அவரைப் போட்டு, அதற்குப் பிறகு அதில் சில உறுப்பினர்களைப் போட்டிருக்கிறார்கள்.

ஒரே நேரத்தில் தேர்தல் வைக்கிறீர்கள். அப்படி நாடாளுமன்றத்தோடு சட்டமன் றங்களுக்கும் தேர்தல் வைத்து, எங்காவது ஒரு மாநிலத்தில் பெரும்பான்மை வராமல் போய்விட்டது என்றால், ஆட்சியை அமைக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது என்றால் அப்போது என்ன செய்வீர்கள்? மறுபடியும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் வரும்வரை அந்தத் தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதி ஆட்சி நடத்தப் போகிறீர்களா? எனவே இப்படி ஒரு கேவலமான சதித் திட்டத்தைத் தீட்டி, எனவே ஒரு அதிபராகத் தான் இருக்க வேண்டும் என்பதற்காக இன்றைக்கு அந்த முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர நாட்டைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

தேர்தல் செலவை மிச்சப்படுத்த வேண்டும், குறைக்க வேண்டும் என்ற ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். நீங்கள் தேர்தல் செலவைக் குறைக்கிறீர்களோ, இல்லையோ, நீங்கள் கொள்ளை அடிப்பதை முதலில் குறையுங்கள் என்று தெரிவித்துள்ளார்.

## இண்டியா கூட்டணி சனாதன தர்மத்தை இழிவுபடுத்துகிறது என்கிறார் அமித் ஷா



எதிர்க்கட்சிகள் அமைத்துள்ள இண்டியா கூட்டணி சனாதன தர்மத்தை இழிவுபடுத்துகிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

ராஜஸ்தானில் இந்த ஆண்டு இறுதிக்குள் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அங்கு நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் அமித் ஷா உரையாற்றினார்.

இதன்போது அவர் கருத்து வெளியிடு கையில், இண்டியா கூட்டணி கடந்த இரண்டு நாட்களாக சனாதன தர்மத்தை இழிவுபடுத்தி வருகிறது. வாக்கு வங்கி அரசியலுக்காக தி.மு.க. தலைவர்களும் காங்கிரஸ் தலைவர்களும் சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசி வருகிறார்கள். நமது சனாதன தர்மத்தை இவர்கள் இழிவுபடுத்துவது முதல்முறையல்ல.

மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது, நாட்டின் வளத்தில் சிறு பான்மையினருக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என பேசினார். ஆனால், பா.ஜ.க. ஏழைகள், பழங்குடி மக்கள், தலித்துகள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என சொல்கிறோம்.

பிரதமர் மோடி மீண்டும் தேர்ந்தெடுக் கப்பட்டால் சனாதனம்தான் நாட்டை ஆளும் என காங்கிரஸ் கூறி இருக்கிறது. லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பைவிட இந்து அமைப்புகள் ஆபத்தானவை என ராகுல் காந்தி கூறி இருக்கிறார் என்று அமித் ஷா தெரிவித்துள்ளார்.

## இந்திய பொருளாதாரம் முன்னேற்றம் அடையும்: மோடி நம்பிக்கை



இந்தியா சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் போது வளர்ந்த நாடாக மாறும் என்றும் ஊழல் வகுப்புவாதம் ஆகியவற்றுக்கு இடமில்லை என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

2047 ஆம் ஆண்டில் இந்தியா வளர்ந்த பொருளாதார ரீதியில் பாரிய முன்னேற்றத்தை அடைந்து இருக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் உலகத்தின் பார்வை இந்தியாவை நோக்குகிறது எனவும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித் துள்ளார்.

# உக்ரைனுக்கு விமான ஏவுகணைகளை வழங்குவதற்கு அமெரிக்கா திட்டம்!



ரஷ்யாவின் வான் பாதுகாப்பு அமைப்புகளுக்குள் நுழையாமலே அதன் விமானங்களை தாக்கி அழிக்கும் ஏ.எம்.ஆர்.ஏ.ஏ.எம். விமான ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

உக்ரைன் ரஷ்யா இடையிலான போர் நடவடிக்கையில் ரஷ்யாவை எதிர்த்து தொடர்ந்து போரிட மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு தொடர்ந்து உதவி வருகின்றன.

அந்த வகையில் உக்ரைனுக்கு அமெரிக்கா தொடர்ந்து நிதி மற்றும் ஆயுத உதவிகளை வழங்கி வருகின்றனர்.

சமீபத்தில் கூட உக்ரைனுக்கு அமெரிக்க கொத்து குண்டுகளை வழங்குவதற்கு ரஷ்யா மற்றும் பல மேற்கத்திய நாடுகள் கடுமையான கண்டனம் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில் ரஷ்யாவின் வான் பாதுகாப்பு அமைப்புகளுக்குள் நுழையாமலே அதன் விமானங்களை தாக்கி அழிக்கும் ஏ.எம்.ஆர்.ஏ.ஏ.எம். விமான ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்க அமெரிக்கா திட்டமிட்டு இருப்பதாக தெரியவந்துள்ளது.

இதனை ஏ.எப்.யு. விமானப்படையின் பேச்சாளர் யூரி இக்னாட் உறுதிப்படுத்தியுள்ளார்.

மேலும் இந்த ஏவுகணையானது 160-180 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்க கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

## உக்ரைனை இலக்கு வைத்து ரஷ்யா தாக்குதல்

உக்ரைனின் டோரேட்ஸ்க் நகரை இலக்கு வைத்து ரஷ்யா தொடர்ந்தும் வான்வழி தாக்குதலை நடத்தியுள்ளது.

குறித்த தாக்குதல் நேற்று நடத்தப்பட்டுள்ளது என உக்ரைன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலினால் உயிரிழப்புக்கள் ஏதும் ஏற்படாத நிலையில், பலர் காயமடைந்துள்ளனர்.

தொடர்ந்தும் உக்ரைனின் முக்கிய நகரங்களை இலக்கு வைத்து ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகின்ற செயற்பாட்டிற்கு சர்வதேச நாடுகள் கண்டனம் வெளியிட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

## பெரு நாட்டில் நிலநடுக்கம்!

பெரு நாட்டின் சான் பெர்னாண்டோவில் இருந்து 36 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள மக்கா பகுதியில் நிலநடுக்கம் ஒன்று உணரப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோளில் 5.3 ஆக பதிவாகியுள்ளது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் சுமார் 10 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங் கள் குறித்த இதுவரை தகவல் ஏதும் வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் பொருள்கள் விலை அதிகரிப்பு: வர்த்தகர்கள் கடை அடைப்புப் போராட்டம்



பாகிஸ்தானில் பொருள்களின் விலை அதிகரிப்பை கண்டித்து வர்த்தகர்கள் கடை அடைப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது. பணவீக்கம் உச்சம் தொட்டுள்ளதால், மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், அரசை எதிர்த்து பாகிஸ்தான் வணிகர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். பாகிஸ்தான் முழுவதும் வணிகர்கள் கடை அடைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஜமாத் - இ இஸ்லாமி கட்சித்தலைவரும் முன்னாள் செனட்டருமான சிராஜல் ஹக் நாடு தழுவிய போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அதைத் தொடர்ந்து, வணிகர்கள், தொழில் அமைப்புகள், சந்தை கூட்டமைப்புகள், போக்குவரத்துத் துறையினர், வழக்கறிஞர்கள் என பல தரப்பினரும் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

இதனால் பாகிஸ்தானின் வணிக மையமான கராச்சி நகரில் நேற்று முன்தினம் அனைத்து கடைகளும் மூடப்பட்டன. இதனால், வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்போது பாகிஸ்தானில் பெட்ரோல் விலை அதிகரித்துள்ளதுடன், மின் கட்டணமும் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் கடன் சுமை அதிகரித்துள்ள நிலையில், அதன் அந்நிய செலாவணி கையிருப்பு முற்றிலும் குறைந்துள்ளது. இதனால், தேவையான பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய முடியாத சூழலில் அந்த நாடு உள்ளது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக சர்வதேச செலாவணி நிதியத்திடமும், நட்பு நாடுகளிடமும் பாகிஸ்தான் உதவி கோரியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# எந்தத் தேர்தலையும் எதிர்கொள்வதற்கு மொட்டுக் கட்சி தாயார் என்கிறார் நாமல்



எந்த ஒரு தேர்தலையும் எதிர் கொள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தயாராக உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கிராம சேவை பிரிவிற்கும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கிளை ஒன்றை ஸ்தாபிக்கும் நடவடிக்கை நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டது.

நாடு முழுவதிலும் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் மறு சீரமைப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி பாராட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிராமத்தில் உருவாக்கப்பட்ட மொட்டுக்கட்சி கிராமிய அரசியலை வலுப்படுத்தும் வகையில் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் கிளைகளை உருவாக்க உள்ளதாக தெரிவித்துள்ளார்.

மக்களை நேசிக்கும் அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் கொள்கைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.




## மாத இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் சினோபெக் எரிபொருள் விநியோகம்

இந்த மாத இறுதிக்குள் நாடளாவிய ரீதியில் தமது சந்தை செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சினோபெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் உள்நாட்டு எரிபொருள் விநியோகஸ்தர்கள் மற்றும் சினோபெக் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவன அதிகாரிகளுடன் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த நிறுவனத்தின் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளின் முன்னேற்றம், எரிபொருள் விநியோக முகவர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான முன்னேற்றம் குறித்தும் அதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளார் ஜனாதிபதி ரணில்



அமெரிக்காவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொது சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 78 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நியூயோர்க்கில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றறவுள்ளார் என ஐக்கிய நாடுகள் சபையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், "நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை மீண்டும் உருவாக்குதல்" என்னும் தொனிப் பொருளின் கீழ் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடர் இம்முறை இடம்பெறவுள்ளது.

இந்த கூட்டத்தொடரில் 2030ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சி நிரலின் மீதான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துதல், அமைதியை நோக்கி நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான திட்டங்கள் மற்றும் உலக காலநிலை மாற்றம் தொடர்பிலான விவகாரங்களுடன் மனிதவுரிமை விவகாரமும் பிரதானமாகக் கலந்துரையாடவுள்ளது.

# கோவில்போரதீவு விபத்தில் காயமடைந்த பெண் சாவு!



களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோவில்போரதீவு பிரதேசத்தில் இடம் பெற்ற விபத்தில் சிக்கிய குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் கடந்த வெள்ளியன்று இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிருஷ்ணன் வீதி, கோவில் போரதீவு பிரதேசத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான 51 வயதுடைய அழகுதுரை தங்கமலர் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

கடந்த 28 ஆம் திகதி ஆலயம் ஒன்றுக்குச் செல்வதற்காக தனது சகோதரியின் வீட்டுக்குத் தனது மகனின் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது மோட்டார் சைக்கிளின் சில்லுக்குள் திடீரென சேலை சிக்கி வீதியில் விழுந்து படுகாயமடைந்த நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்திய சாலையில் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டு இவர் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

களுவாஞ்சிகுடிநீதிவான்ஜே.வி.ஏ.ரஞ்சித்குமாரின் உத்தரவிற்கு அமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும் படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார்கள் மேற்கொண்டு வருகின்றனர்.



# இலங்கையர்களுக்குத் தொழில் வாய்ப்பு: உலகின் மிகப்பெரிய நிறுவனம் இணக்கம்

உலகின் மிகப்பெரிய கப்பல் போக்கு வரத்து நிறுவனமான ஃபார் ஷிப்பிங் நிறுவனம் இலங்கையில் பயிற்சி பெற்ற கப்பல் பணியாளர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்க இணங்கியுள்ளது எனத் துறைமுகங்கள், கப்பல் போக்கு வரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் முகாமைத்து வப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் நேற்று துறைமுகங்கள், கப்பல் போக்கு வரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவைச் சந்தித்த போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையில் உள்ள கடற்றொழில் பயிற்சி நிறுவனங்களில் பட்டம் பெற்ற இளைஞர்களை தமது நிறு வனத்தில் சேர்த்துக் கொள்ளவும், பின்னர் நிரந்தரமாக தொழிலில் அமர்த்த வும் அந்தக் கப்பல் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை விருப்பம் தெரி வித்துள்ளது.

# பொறுப்பற்று செயற்படும் அமைச்சர்கள் மீது நாமே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவோம்

## ஆளும் கட்சி எம்.பியான ரோஹித அபேகுணவர்தன எச்சரிக்கை



கொழும்பு,செப்.04

அமைச்சரவை அமைச்சர்கள் பொறுப்பற்ற வகையில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக நம்பிக்கையில் லாப் பிரேரணையை நாங்களே கொண்டு வருவோம். ஒருசில அமைச் சர்கள் பொறுப்புக்களை மறந்து எதிர்கால அரசியலை வலுப்படுத்திக் கொள்ளவதில் அதிக கவனம் செலுத்தி யுள்ளார்கள் என பொதுஜன பெர முனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரி வித்தார்.

நாவல பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப் பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

சுகாதாரத் துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு சுகாதாரத்துறை அமைச் சர் கெஹெலிய ரம்புக்வெல பொறுப்புக் கூற வேண்டியதில்லை.

அரச அதிகாரிகளின் பொறுப்பற்ற செயற்பாடுகளினால் மருந்து தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது.

இவ்வாறான நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியினர் குறுகிய அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்துள்ளனர்.

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்து,பிரேரணையை தோற்கடிப்போம்.

சுகாதாரத்துறை அமைச்சர் தனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பினை முறையாகச் செயற்படுத்தியுள்ளார்.

அமைச்சரவை அமைச்சர்களில் ஒரு சிலர் ஏதோ உயர் இடத்தில் இருப்பவர்கள் போல் எண்ணிக் கொண்டு பொறுப்பற்ற வகையில் செயற் படுகிறார்கள்.

வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை முறையாக செயற்படுத்தாமல் தங்க ளின் எதிர்கால அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்ள அதிக கவனம் செலுத்தியுள்ளார்கள்.

பொறுப்பற்ற வகையில் செயற்படும் அமைச்சர்களுக்கு எதிராக நாங்களே நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவோம்.

ஆகவே அமைச்சர்கள் முறையாக செயற்பட வேண்டும் என்பதை தெளிவாக குறிப்பிட்டுக. கொள்கிறோம். இது தற்காலிக அரசாங்கமே தவிர நிலை யான அரசாங்கமல்ல என்பதை அமைச்சரவைஅமைச்சர்கள்நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். - என் றார்.



## கெஹலியவுக்கு எதிரான பிரேரணை:

# தமிழ்க் கூட்டமைப்பு நாளை கூடி தீர்மானம்

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிர்த்து வாக்களிப்பதா இல்லை நடுநிலை வகிப்பதா என்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் கூடித் தீர்மானிக்கவுள்ளன.

இதேவேளை,இந்தப் பிரேரணையில் கையெழுத்திட்டுள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது பிரேரணையை ஆதரித்து வாக்களிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியினால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நாளை ஆறாம் திகதி முதல் மூன்று நாள்களுக்கு நடைபெறவுள்ள நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒன்றுபட்டிருந்த இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன.

இலங்கைதமிழரசுக்கட்சியின்சார்பில் கருத்து வெளியிட்ட எம்.ஏ.சுமந்திரன் எம்.பி, சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எமது நாடாளுமன்றக் குழு கூடியே தீர்மானிக்கும். அக்கூட்டம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் நாடாளுமன்ற அமர்வு நாள்களில் நடைபெறவுள்ளது என்றார்.

அதேவேளை, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் கருத்து வெளியிட்ட செல்வம் அடைக்கலநாதன், எமது கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளுடன் ஆராய்ந்து தீர்மானம் எடுக்கப்படவுள்ளதென்று குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியா மாமடு குளத்தின் சேற்றில் சிக்கிய யானையை மீட்க முயற்சி!

வவுனியா மாமடு குளத்தின் நீரேந்து பகுதியில் 5 வயது மதிக்கத்தக்க யானையொன்று சேற்றினுள் புதையுண்ட நிலையில் உயிருக்குப் போராடுகின்றது.

அதனை மீட்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.



வவுனியா மாமடு குளத்தின் நீரேந்து பகுதியில் மாடு மேய்க்க சென்ற கிராம வாசி ஒருவர், சேற்றில் புதையுண்ட நிலையில் யானை ஒன்று உயிருக்குப் போராடுவதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து மாமடு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. யானையை மீட்பதற்கான நடவடிக்கையில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பொலிஸார் மற்றும் கிராம மக்கள் இணைந்து ஈடுபட்டு வருகின்றனர்.







# கொழும்பில் வெள்ளம்

நாட்டின் பல பாகங்களிலும் மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கிறது. ஆனாலும், சில பிரதேசங்களில் வறட்சியால் மக்கள் நீரின்றி கஷ்டப்படுகின்றனர்.

நேற்றைய தினம் மேல் மாகாணத்தில் பெய்த கடும் மழையால் கொழும்பின் பல பகுதிகள் நீரில் மூழ்கி வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன.

அடைமழை மற்றும் வீசிய கடும் காற்றினால் கொழும்பில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன், வீதிகளில் வெள்ளம் நிரம்பியுள்ளது.

இந்நிலையில், வீதிகளில் தேங்கிக் கிடக்கும் வெள்ள நீரை அகற்றும் நடவடிக்கையில் கொழும்பு மாநகர சபை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 04.09.2023




இன்று நீங்கள் விரும்பும் வகையில் பலன்கள் இருக்காது. இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும். எனவே இன்று எல்லா செயல்களிலும் நல்ல விளைவு களைப் பெறுவதற்கு தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். கூடுதலாக கொடுக்கப்பட்ட வேலைகள் அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் காணப்படாது. இன்றைய நாளை மகிழ்ச்சியான நாளாக ஆக்குவதற்கு உங்கள் துணையுடன் முறையான தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. பணத் தட்டுப்பாடு ஏற்படலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். அவைகளை சாமார்த்திய மாக கையாள வேண்டும். இன்று வாக்கு வாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் பிறரிடம் நட்புணர்வுடன் பழக வேண்டும். சிறந்த பாடல்கள் கேட்பதன் மூலம் சற்று ஆறுதல் பெறலாம்.

இன்று கவனக் குறைவு காரணமாக திறமையாக பணியாற்ற இயலாது. உங்கள் வேலையில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் இலேசான மற்றும் களிப்பான தருணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் துணையை காயப்படுத்தும் வகையில் கவனக்குறைவான வார்த்தைகளை பேச நேரலாம். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று பணஇழப்புகள் காணப்படும். இன்று செலவு களைத் தாண்டி பாதுகாப்பாக சேமிக்க இயலாது.




இன்று மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க சாதகமான நாள் மற்றும் பல நல்ல பலன்கள் கிடைக்கும் நாள். உங்களை ஆதரிக்கக்கூடிய நல்ல நண்பர்களையும் கூட்டாளிகளையும் பெறுவதற்கு நல்ல வாய்ப்புள்ள நாள்.

உங்கள் செயல்பாட்டின் முலம் உங்கள் திறமை வெளிப்பட்டு முன்னனியை பெறறுத் தரும். அதன் விளைவாக உங்களுக்கு ஊக்கத்தொகை சலுகைகள் போன்ற வகையில் பலன் கிடைக்கும்.

உங்களுடைய துணையிடம் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் அனுகுமுறை உங்கள் துணையை மிகுந்த அளவில் மகிழ்ச்சிக்குள்ளாக்கும்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். சேமிப்பிற்கு அதிகமான வாய்ப்பு உள்ளது. உங்கள் நிதிவளர்ச்சி கணிசமாக உயர்ந்து காணப்படும்.




இன்றைய நாள் சுமுகமாக காணப் படும். உங்களுடைய இலட்சியத்தை விரைவாகவும் எளிதிலும் அடைவீர்கள். இன்று மகிழ்ச்சியான நாளாக காணப் படும். உங்கள் வீடு புணரமைத்தலுக் கோ அல்லது புதிய வீடு வாங்குவதற்கோ இந்த நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணிச்சூழலில் வளர்ச்சி வாய்ப்பு சாதகமாக உள்ளது. நீங்கள் சவால்களை திறமையாகக் கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்லுறவு வளரும்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். சேமிப்பு நல்ல பலன் களைத் தரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். மகிழ்ச்சியின் காரணமாக உங்கள் ஆரோக்கியம் திடமாக இருக்கும்.




இன்று மிதமான பலன்களே காணப்படும்.தற்போதைய நிலைமை களால் நீங்கள் மனக்குழப்பத்துடன் காணப்படுவீர்கள். பெரியோர்களின் ஆலோசனை உங்களுக்கு வழிகாட்ட மிகவும் உதவும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்ட மிட்டு பணிகளை ஆற்றுவதன் மூலம் நற்பலன்களைப் பெறலாம்.

நீங்கள் உங்கள் துணையிடம் பேசும் பொழுது விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் துணையுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பேச்சில் இனிமையையும் உள்ளன்பையும் வெளிப்படுத்துங்கள்.

இன்று செலவினங்கள் அதிகமாக காணப்படும். போது மான பணத்தை சேமிப்பது கடினமாகக் காணப்படும்.




இன்று மிதமான பலன்களே கிடைக் கும் நாள்.உங்களுக்கு சாதகமாக பலன்கள் அமைய நீங்கள் சிறப்பாக செயல்படவேண்டும். ஆன்மீக காரியங்க ளில் ஈடுபடுதல் அது சம்பந்தமாக பய ணம் மேற்கொள்தல் மெச்சத்தக்கதாக அமையும்.

மேற்கொண்ட பணிகள் பாதியில் நிற்கும். இன்று கூடுதல் பணிகள் சேர்வதன் காரணமாக கொடுக்கப்பட்ட பணிகள் தேங்கிக் கிடக்கும்.

உங்கள் துணையிடம் காதலையும் அன்பையும் வெளிப்படுத்த மாட்டீர்கள். இது அவரை காயப்படுத் தும்.மற்றும் உங்கள் நட்ததையை பற்றிய கவலையை உண்டாக்கும்.

இன்று நிதிநிலைமை ஏற்ற இறக்கத்துடன் காணப்படும். உங்கள் குடும்ப அங்கத்தினர்களின் ஆரோக்கியத் திற்காக செலவு செய்வீர்கள்.




இன்று சாதகமான நாளாக அமை யும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும். எடுக்கும் முயற்சிகள் பயனுள்ளதாகவும் எளி தாகவும் இருக்கும்.

இன்று மகிழ்ச்சியுடன் பணியாற்றுவீர் கள்.அதனால் உங்கள் மேலதிகாரிகளிடம் நற் பெயரையும் அங்கீகாரத்தையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். உங்கள் தொடர்பாடல் திறமையால் அவர் இதயத்தில் இடம் பிடிப்பீர்கள்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். சௌகரிங்கள் மற்றும் செழிப்பை அனுபவிக்கும் நாளாக இன்றைய நாள் அமையும்.

ஆரோக்கியக் குறைபாடுகள் ஏதும் இருக்காது. மகிழ்ச்சியும் சாந்தமான மனப்பான்மையும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.




இன்று பயனுள்ள முடிவுகள் கிடைப் பதைக் காணலாம். இன்று மிகுந்த ஆற்றலும் உற்சாகமும் காணப்படும். அது உங்கள் முயற்சிகளின் வெற்றிக்கு உதவும். அனைத்து விஷயங்களிலும் வெற்றி பெறலாம்.

பணியில் உங்கள் திறமைகளைக் காட்டுவீர்கள். உங்கள் திறமை மற்றும் புத்திசாலித்தனம் உங்கள் செயல்பாட்டில் பிரதிபலிக்கும்.

உங்கள் துணையுடனான அனுகுமுறையில் அமை தியை கடைபிடிப்பீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவு வளரும்.

இன்று பணவரவு மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் காணப்படும்.அது உங்கள் கடின உழைப்புக்கான ஊக்கத் தொகை மற்றும் சலுகைகளாக இருக்கலாம்.

மனதில் நிறைந்து காணப்படும் உற்சாகம் காரண மாய் நல்ல ஆரோக்கியம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -04.09.2023

## தனுசு

இன்று மிதமான பலன்களே கிடைக்கும் இன்று உங்களிடம் சோம்பலும் உற்சாகமின்மையும் காணப்படும் அது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும்.

பணியிடச்சூழல்சுமூகமாக இருக்காது. தவறுகள் செய்ய வாய்ப்பு உள்ளது. அது உங்களது மேலதிகாரிகளின் கவனத்திற்கு செல்லும். அவர்கள் அதிருப்தியை வெளிப்படுத்துவார்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள மாட்டீர்கள். திருப்தியான தருணங்கள் காணப்படும் போதிலும் அவற்றை நீங்கள் உணரமாட்டீர்கள்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். பயணங்களின் பொழுது பணஇழப்புகள் நேரலாம்.

ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். தோல் எரிச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளது. எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும்.

## மகரம்

இன்றைய தினம் குறைந்த அளவே சாதகமாக காணப்படும். உணர்ச்சிப் பூர்வமான காரியங்களில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். உங்கள் தன்னம்பிக்கையை இழக்க நேரிடலாம். எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள். நகைச்சுவை உணர்வுடன் எதையும் ரசிக்கத் தெரிந்தால் இன்று நல்ல பலன்களைக் காணாலாம்.

கொடுக்கப்பட்ட பணிகளை சரியான நேரத்தில் முடிப்பதற்கான சாத்தியம் கிடையாது. அது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். உங்கள் சகபணியாளர்களிடமிருந்து தொல்லைகளை சந்திக்கலாம்.

இன்றைய நாளை மகிழ்ச்சிகரமாக ஆக்குவதற்கு வளைந்து கொடுக்கும் அணுகுமுறை அவசியம். மகிழ்ச்சியைத் தக்க வைக்க அனுசரித்து செல்ல வேண்டும்.

தேவையில்லாத செலவுகளால் உங்கள் கையிருப்பு வற்றிவிடும்.

## கும்பம்

இன்று உங்கள் விருப்பங்கள் பூர்த்தியடைவதற்கு சாதகமான நாள். நல்ல தருணங்களை அனுபவிப்பதற்கு உகந்த நாள். புதிய தொடர்புகள் மற்றும் பொதுக் கூட்டங்களில் பங்கெடுத்தல் போன்ற விஷயங்களுக்கு நீங்கள் இன்றைய தினத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணிகளை ஒழுங்குமுறையான அணுகுமுறையுடன் செய்வீர்கள். நீங்கள் பணியில் மூத்தவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை நேரடியாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக நேரம் கழியும்.

நிதிநிலைமை அபாரமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## மீனம்

இன்றைய தினம் உங்களுக்கு சாதகமாக அமையாது. முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும். பிறருடன் பேசும் பொழுது பின் விளைவுகளைத் தவிர்க்க வார்த்தைகளில் கவனம் செலுத்தவும். நீங்கள் பாதுகாப்பின்மை உணர்வு கொண்டிருப்பீர்கள். பிரார்த்தனை உங்களுக்கு ஆறுதலை அளிக்கும்.

கூடுதல் வேலைப் பொறுப்புகள் காரணமாக கொடுக்கப்பட்ட பணிகளை சரியான நேரத்தில் முடிக்க இயலாது. சாதகமான பலன்களைப் பெறுவதற்கு நீங்கள் பணி முறைகளை திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் பொறுமையான அணுகுமுறை தேவை. உங்கள் உணர்வுகளை ஆக்ரோஷமாக வெளிப்படுத்த நேரலாம் அதனை தவிர்ப்பது நல்லது.

அதிகரிக்கும் குடும்ப பொறுப்புகள் காரணமாக பணத்தை அதிக அளவில் செலவு செய்ய நேரலாம்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence


S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPAR JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park